20th TEST

Marks : 300
Time : 3 Hrs

TARGETING

# TNPSC

## GROUP-II

## 2023



## QUESTION WITH SIMPLIFIED ANSWER

## MAINS WRITTEN EXAM

# தேசிய நடப்பு நிகழ்வுகள்

ARISE AWAKE ACHIEVE

SURESH' IAS ACADEMY

தமிழ் வழி


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
| --- | --- | --- | --- | --- |
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 04567 - 355922 | 0452 - 2383777 | 044 - 47665919 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 |

TEST 20 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

### அலகு - 1

**1) அண்டார்டிக் மசோதாவினை பற்றி விளக்குக.**

**இந்திய அண்டார்டிகா மசோதா 2022 மசோதா** 1

- மக்களவையில் ஏப்ரல் 1, 2022இல் அறிமுகம்
- கீழ்க்கண்டவற்றை நடைமுறைப்படுத்த கொண்டு வரப்பட்டது.
- அண்டார்டிகா ஒப்பந்தம்
- அண்டார்டிகா கடல்சார் வளங்களின் பாதுகாப்பிற்கான மாநாடு
- அண்டார்டிக் ஒப்பந்த பாதுகாப்பு சுற்றுச்சூழல் நெறிமுறைகள்

**அண்டார்டிக் ஒப்பந்தம்** 5

- வாஷிங்டன் – 1 டிசம்பர் 1959
- அண்டார்டிகா அமைதிக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும்.

**மசோதாவின் சிறப்பம்சங்கள்**

1. பொருந்தும் தன்மை : அண்டார்டிகாவிற்கு செல்லும் அனைத்து கப்பல்கள் விமானத்திற்கு பொருந்தும்.
2. பரப்புகள் : $60^{\circ}$ அட்சக்கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து தீவுகள், கடல்கள் மற்றும் பனிப்பிரதேசங்கள்
3. மத்தியக் குழு : தலைவர் + 10 உறுப்பினர்கள் + 2 நிபுணர்கள்

**மசோதாவிற்கான காரணம்**

- இந்தியா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- உள்நாட்டு சட்டம் இல்லாததால் உலகளாவிய சட்டத்தை நம்பி வாழும் காரணம்

**2) பாரத் நெட் திட்டம் என்றால் என்ன? அவற்றின் குறிக்கோள்கள் என்ன?**

**பாரத் நெட் திட்டம்** 3

**பின்புலம்**

- அக்டோபர் 25, 2011 தேசிய ஆப்டிக்கல் பைபர் வலையமைப்பாக துவங்கப்பட்டது.
- 2015இல் பாரத் நெட் என மறுபெயரிடப்பட்டது.

**நோக்கங்கள்** 3

1. 2,50,000 கிராம பஞ்சாயத்துக்களை இணைத்தல்
2. நடைமுறையில் உள்ள ஆப்டிக்கல் பைபர் வலையமைப்பை உபயோகித்து கிராம பஞ்சாயத்துகளுக்கு விரிவாக்கம் செய்தல்
3. அகலவரிசை இணைப்பு

- 20 எம்.பி.பி.எஸ் முதல் 20 எம்.பி.பி.எஸ் அகலவரிசை இணைப்பினை அனைத்து வீடுகளுக்கும் வழங்குதல்
- பொது சேவை மையங்களை பயன்படுத்தி இணைப்புகள் வழங்குதல்

4. புதுப்பித்த மாதிரி

- தனியார் & பொது பங்களிப்பை வலுப்படுத்துதல்

5. பாரத் அகலவரிசை வலையமைப்பு

- ஒரு தனித்துவம் வாய்ந்த சிறப்பு நோக்கு அமைப்பு
- 25 பிப்ரவரி 2012.
- அரசாங்கத்திற்கு சொந்தமான உள்கட்டமைப்பு வழங்குதல்

**3) சமீபத்திய செய்திகளில் கங்காரு நீதிமன்றம் பற்றி கூறப்பட்டுள்ளது. அவற்றை பற்றி விளக்குக.**

**கங்காரு நீதிமன்றம்** 2

- சரியான ஆதாரங்கள் இன்றி சிலரை குற்றம் சாட்டும் வண்ணம் சில குழுக்கள் / மக்களால் நடத்தப்படும் முறையற்ற / அதிகாரமற்ற நீதிமன்றங்கள்

**செய்திகளில்** 3

- தலைமை நீதிபதி என்.வி.ரமணன் – இந்தியாவில் ஊடகங்கள் கங்காரு நீதிமன்றங்களை நடத்துகிறது.
- நீதித்துறை செயல்பாடுகளை பாதிக்குமாறு ஊடகங்களில் நீதிபதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரச்சாரம்

SURESH'

- ஊடகத் தீர்ப்புகள் : செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகளில் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முன் தீர்வு வழங்கப்படுகிறது.

**விளைவுகள்** 1

- நீதித்துறை செயல்பாடுகளை பாதிக்கிறது.
- உண்மை & தவறான செய்திகளை பகுத்தறிய இயலாத நிலை
- சமுதாயத்தில் இணக்கத்தை பாதிக்கிறது.
- வன்முறைக்கு வழிவகுக்கிறது.

**கட்டுப்பாடுகள்**

- சமீபத்திய தகவல் தொழில்நுட்ப விதிகள் - 2021

**4) மினி ஜாலியான் வாலாபாக் பற்றி விளக்குக.**

**மங்கர் தம் படுகொலை** 3

- 1913ஆம் ஆண்டு இராஜஸ்தான் குஜராத் எல்லையில் உள்ள மங்கர்தம் மலைப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான பில் பழங்குடியினர் பிரிட்டிஷால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- கோவிந்த் குரு என்பவர் தலைமையில் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்தனர்
- ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு முன்பு 6 வருடங்கள் முன் நடைபெற்றதால் மினி ஜாலியன் வாலாபாக் எனப்பட்டது.

**சமீபத்திய செய்திகளில்** 3

- இராஜஸ்தான், குஜராத், மகாராஷ்ட்ரா மற்றும் மத்திய பிரதேச பகுதியில் வரலாற்று சிறப்பு வாய்ந்த பகுதியாக பிரதமர் அறிவித்தார்.
- நான்கு மாநிலங்களும் ஒருங்கிணைந்த முறையில் சாலையை ஏற்படுத்தி ஒரு நினைவு சின்னத்தை உருவாக்க வலியுறுத்தினார்
- இராஜஸ்தானில் மங்கர்தம் பகுதியை பழங்குடியினருக்கான இடமாக மேம்படுத்துவதை இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார்.

**5) சமீபத்திய செய்திகளில் பொதுசிவில் சட்டம் பற்றி கூறப்பட்டுள்ளது, அவற்றை விளக்குக.**

**பொது சிவில் சட்டம்** 3

- அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் - விதி 44
- நாட்டின் எல்லைக்குள் பொது சிவில் சட்டம் என்பதை விரிவுபடுத்த அரசின் கடமை
- தேசத்தின் அனைத்து மதத்தினை சேர்ந்த ஒட்டுமொத்த மக்களின் திருமணம், விவாகரத்து, தத்தெடுத்தல் போன்றவற்றிற்கான ஒரே சட்டத்தை வழங்குதல்

**இந்தியாவில் பொது சிவில் சட்டம்** 2

- கோவா மட்டுமே கொண்டுள்ளது.
- ஜவஹர்லால் நேரு காலம் தொட்டு பொதுசிவில் சட்டம் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்திகளில்** 1

- சட்டம் & நீதித்துறை அமைச்சகம் உச்சநீதிமன்றத்தில் எந்த சட்டத்தையும் உருவாக்க பாராளுமன்றத்திற்கு உத்தரவிட முடியாது எனவும் பொதுசிவில் சட்டம் கோரிய மனுவை தள்ளுபடி செய்யக் கோர்வது
- பெரும்பான்மையான குடிமையியல் விவகாரங்களில் மாநிலங்கள் ஒரே மாதிரியான குறியீட்டை பின்பற்றுகிறது.
- பல மாநிலங்கள் ஒரே மாதிரியான மோட்டார் வாகன சட்டம் 2019ஐ நிர்வகிக்க மறுத்துள்ளன.

**6) சிவிங்கிப்புலித் திட்டம் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

**சிவிங்கிப் புலித்திட்டம்** 2

- இந்தியாவிற்கு ஆப்பிரிக்க சிறுத்தை அறிமுகம்
- செப்டம்பர் 17, 2022
- 8 சிறுத்தைகள் - 3 ஆண் & 5 பெண்
- சிறுத்தைகளின் தோற்றம் - நமீபியா
- அறிமுகம் செய்யப்பட்டது - குனோ தேசிய பூங்கா, மத்தியப்பிரதேசம்

**மறு அறிமுகம் செய்வதற்கான காரணங்கள்** 1

- 1952ஆம் ஆண்டு அழிந்த இனமாக அறிவிக்கப்பட்டது.

**செயல்திட்டம்** 3


- ஒன்றிய சுற்றுச்சூழல் காடுகள் & பருவநிலை மாறுபாடு அமைச்சகம்
- தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் 18ஆவது கூட்டத்தில் தொடங்கப்பட்டது (2005)
- 50 பெரிய பூனைகள் - 2027

**முக்கியத்துவம்**

- உலகின் முதன் முறையாக கண்ட இடப்பெயர்வு
- அழிந்துவரும் உயிரினப் பாதுகாப்பு முன்னெடுப்பு
- சுற்றுச்சூழல் சுற்றுலாவை அதிகரித்தல்
- இந்திய எண்ணெய் நிறுவனம்
- ரூ 50 கோடி – கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு அடிப்படையில் வழங்கியது.

**7) நிக்ஷாய் மித்ரா பற்றி குறிப்பு வரைக.**

**நிக்ஷாய் மித்ரா திட்டம்** 2




- சமீபத்தில் குடியரசுத் தலைவர் பிரதம மந்திரி டி.பி.முக்த் பாரத் அபியான் மற்றும் நிக்ஷய் 2.0 போர்டல்
- இலக்கு : 2025க்குள் காசநோயை வெளியேற்ற வேண்டும்.

**திட்டம்** 4

- காச நோயாளிகளுக்கு நேரடியாக ஊட்டச்சத்து பொருட்கள் தொழிற்கல்வி உதவிகளை வழங்குவதற்கு கூட்டுத் திட்டம்
- ஆதரவு வழங்க நன்கொடையாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்குகிறது.

**மூன்று நீடித்த ஆதரவு**

1. ஊட்டசத்து
2. கூடுதல் கண்டறிதல்
3. தொழில் ஆதரவு

**பெருநிறுவனங்கள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள்**

**– தத்தெடுப்பு ஏற்பாடு**

- கண்டறிவதற்கான தேவை
- காச நோயாளிகளை 1 – 3 ஆண்டுகளுக்கு ஆதரவாக தத்தெடுத்தல்
- காசநோயாளியின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆதரவாக தொழிற் பயிற்சி அளிக்கலாம்

**8) பன் நெருக்கடி பற்றி விளக்குக**

**பன் நெருக்கடி:** 2

**பின்புலம்**

- 2016ஆம் ஆண்டு ஐரோப்பாவில் நிலவிய பிரக்ஸெட், சூழல் மாறுபாடு மற்றும் அகதிகள் பிரச்சினைகளை குறிக்க பயன்படுத்தப்பட்டது.
- ஒட்டுமொத்த பெரிய நெருக்கடி நிலையைக் காட்டிலும் பன் நெருக்கடி நிலை ஆபத்தானது.
- இரட்டைமய வடிவம்
  - பொது நெருக்கடி
  - ஒவ்வொரு நாட்டிற்குமான தனித்துவ நெருக்கடிகள்

**இந்தியாவிற்கு** 1

- உலக காரணிகள் – பணவீக்கம் – பணமதிப்பு குறைப்பு, வட்டிவீதம், எரிபொருள் பிரச்சினைகள்
- தனித்துவ சவால்கள் – வேலைவாய்ப்பின்மை அதிகம்

**கடந்த 30 மாதங்களில் ஏற்பட்ட சர்வதேச நெருக்கடிகள்** 3

- காலநிலை மாற்றப் பிரச்சினைகள்
- உலகமயமாதலின் சிக்கல்கள்
- ரஷ்யா – உக்ரைன் பிரச்னை
- அமெரிக்க – சீனா மறைப்போர்

**9) விக்ரம் – எஸ் பற்றி குறிப்பு வரைக.**

**விக்ரம் எஸ்** 2

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்ட முதல் தனியார் ராக்கெட்
- நவம்பர் 18, 2022 அன்று ஸ்கைரூட் ஏரோஸ் போஸ் என்ற பெங்களூர் நிறுவனம் ஏவியது.

- திட்டம் – பிராரம்ப்
- ஆதரவு – ஸ்கைரூட் & இன்ஸ்போஸ்

**சிறப்புகள்** 4

- ஒற்றை நிலை – துணை சுற்றுப்பாதை ஏவு வாகனம்
- முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட கார்பன் காம்போசிட் வடிவம்
- 800 கிகி வரையிலான எடையை சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- விக்ரம் I, II & III என வகைப்படுத்தப்படுகிறது.
- ராமன் எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது.
- திட எரிபொருள் மூலம் எரியூட்டப்படுகிறது.
- நைட்ரஜன் டெட்ராக்சைடு & மோனோ மெத்தில் ஹைட்ராக்சின்

**10) 90-70-90 என்றால் என்ன? அவற்றைப் பற்றி விளக்குக.**

**90-70-90** 2

- உலக சுகாதார நிறுவனம் - 2030க்குள் அனைத்து நாடுகளையும் நோய்த் தடுப்பு முறையில் 90-70-90 அடைய இலக்கு கொண்டது.
- 90% - 15 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்.
- 70% - 35 முதல் 45 வயதுக்குட்பட்ட பணிகளுக்கு HPV டி.என்.ஏ – வைரஸ் பரிசோதனை
- 90% - பரிசோதிக்கப்பட்டவர்களுக்கு 90% பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

**ஹெச்.பி.வி வைரஸ்** 2

- கருப்பை வாய் புற்றுநோய் உருவாக்குகிறது.
- வைரசின் 16, 18ஆம் வகைகள் உடலுறவுக்குப் பின் ஆண் & பெண் இருவரையும் தொற்றுகிறது.

**அறிவிப்பு** 2

- 2020 – நவம்பரில் இலக்கு விடுவிக்கப்பட்டது.
- 2120ஆம் ஆண்டுக்குள் கருப்பை வாய் புற்றுநோய் இல்லாத நிலையை எட்டலாம்.

**11) ஆதித்யா L1 திட்டம் பற்றி கூறுக.**

**ஆதித்யா L1** 2

- சூரியனின் ஒளிக்கோளம், குரோமோஸ்பின் போன்றவற்றை ஆராய 2008ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

**விண்கலன்** 1

- பி.எஸ்.எல்.வி – சி – 56 ராக்கெட் மூலம் ஏவ திட்டம்
- மொத்த எடை 1500 கிலோகிராம்
- புவியில் இருந்து 109 நாள் பயணம்
- பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள முதலாவது லெக்ராஞ்சியின் புள்ளியில் நிலைநிறுத்தப்படும்
- தூரம் – 1,50,000 கி.மீ

**தொகுப்புகள்** 3

- VELC, SUIT, ASPEX
- PAPA, SOLEX, HEIOS
- காந்தமானி

**பலன்கள்**

- சூரியப் புயல்களை கண்காணிக்கலாம்.
- சூரிய வெளிப்புற இயக்கவியல் ஆய்வு
- சூரிய மண்டல வெளிப்படும் துகள்கள் பற்றிய ஆய்வு

**12) கோர்விவேக்ஸ் திட்டம் பற்றி கூறுக.**

**கார்பாவாக்ஸ் தடுப்பூசி** 2

- புரதத் துணை அலகுகளைக் கொண்ட மறு இணைப்பு தடுப்பூசி
- SARS – Cov – 2 வைரசின் மேல்பகுதியில் உள்ள கூர்முனை புரதத்தினை கொண்டுஉருவாக்கப்படுகிறது.
- கோவாக்சின் போன்ற செயல்படாத தடுப்பூசிகளால் போன்றது அல்ல.
- வடிவமைத்த நிறுவனம் : பேய்லர்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்
- ஹைதராபாத் - இந்திய மருந்தக நிறுவனத்தால் முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

**செயல்பாடு** 2

- உடலில் செலுத்தப்பட்ட கூர்முனைப் புரதங்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி உடல் தயார் செய்கிறது.
- வைரஸ் எதிர்ப்பு நினைவாற்றலை பயன்படுத்தி செயல்படுகிறது.

**முக்கியத்துவம்** 2

- அவசர கால பயன்பாட்டிற்கான அங்கீகாரம் பெறாத இந்திய அரசின் கொள்முதல்

SURESH'

- உயிரி தொழில் நுட்பத் துறை மூலம் ரூ100 கோடி மானியத்தில் தடுப்பூசி தயாரிப்பு

13) நிலவொளி கலாச்சாரம் பற்றி சிறுகுறிப்பு வரைக

**நிலவொளி கலாச்சாரம்** 1

- வழக்கமான பணி நேரத்தை தவிர அதாவது 9 -5 க்கு பிறகு மாலை நேரங்களில் மற்றொரு நிறுவனத்தில் வேலை செய்து வருமானம் ஈட்டும் செயல்முறை
- பணி நேரத்திற்கு பிறகு இரண்டாவது வேலையில் வருமானம் ஈட்டும் செயல்முறை

**காரணங்கள்** 3

- வாழ்க்கை தரத்தை பராமரிக்க குறைந்த ஊதியம் பற்றாக்குறை
- அதிகரித்து வரும் பணவீக்கம்
- கூடுதல் நேரத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல்
- சலிப்பு எதிர்த்துப் போரிட

**தொழில்நுட்ப நிறுவனங்கள் எதிர்க்கக் காரணம்** 2

- வட்டி மோதல்கள்
- செயல்திறன் குறைபாடுகள்
- வருகையின்மை
- வளங்களின் தவறான பயன்பாடு

14) AD 1 ஏவுகணை பற்றி விளக்குக.

**AD 1 ஏவுகணை:** 3

- நீண்ட தூர இலக்குகளை இடைமறித்து தாங்கும் ஏவுகணை
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வடிவமைத்து அப்துல்கலாம் தீவில் பரிசோதனை செய்யப்பட்டது.

**சிறப்பம்சங்கள்** 2

- 5000 கி.மீ வரை விண்ணில் பாய்ந்து செல்லும்
- 100 கி.மீ உயரத்திற்கு உள்ளே மற்றும் வெளியே தாக்கும் இரண்டு வகைகள்
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பு
- இரண்டு நிலை திட மோட்டார்

**செயல்பாடு** 1

- நமது ரேடாரில் கண்டறியப்பட்டவுடன் ஏ.டி.-1 தாக்குதல் துவக்கும்.
- பல அடுக்கு பாதுகாப் வழங்கும் திறன்
- 99.8% துல்லியத்தன்மையாக தாக்கும் திறன்
- ஏ.டி.2 ஏவுகணை வளர்ச்சியில் உள்ளது.
- நிலை - II இன் ஏவுதல் நவம்பர் , 2022

15) திட்டம் 17A பற்றிக் குறிப்பு எழுதுக

**திட்டம் 17A** 2

- இந்திய கடற்படைக்கு ஏழு இரகசிய போர்க்கப்பல்களை கட்டுவதற்காக 2015இல் அறிமுகம் செய்யப்பட்டது.
- மதிப்பீடு - ரூ 50,000 கோடிகள்

**நிறுவனங்கள்**

- 7 போர்க்கப்பல்களில் 3 போர்க்கப்பல்களுக்கு கட்டுவதற்கு கார்டன் ரீச் நிறுவனத்திற்கு ஒப்பந்தம்
- 4 போர்க்கப்பல் மும்பை மசகான் டாக்ஸ் லிட் - நிறுவனத்திற்கு ஒப்பந்தம்

**போர்க்கப்பல்கள்** 2

- 2019ஆம் ஐ.என்.எஸ் நீலகிரி கப்பல் சோதனை பார்க்கப்பட்டது.
- 2022ஆம் ஆண்டு ஐ.என்.எஸ் நீலகிரி கப்பல் சோதனை பார்க்கப்பட்டது.
- 2022ஆம் ஆண்டு ஐ.என்.எஸ் உதயகிரி மற்றும் தாராகிரி கப்பல் விடுவிக்கப்பட்டது.

**அம்சங்கள்** 2

- உயர்மட்ட இரகசிய அம்சங்கள்
- பிரம்மோஸ் சூப்பர்சோனிக் - மேற்பரப்பில் கொண்டிருக்கும்.
- ராக்கெட்டுகள் & கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள்

16) ஒரே நாடு, ஒரே உரம் பற்றி விளக்குக.

**ஒரே நாடு ஒரே திட்டம்** 2

- திட்டத்தின் கீழ் உர நிறுவனங்கள் / உர சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் பாரத் என்ற ஒரே வியாபாரம் குறியீட்டை பயன்படுத்த வேண்டும்.
- பாரத் முத்திரை பிரதம மந்திரி பாரதிய ஜன்ஸெனதி பரியோஜனங்களை கீழ் வருகிறது.

SURESH

**பொட்டலங்கள்** 4

- பொட்டலத்தின் 2 /3 பங்கின் பகுதியில் புதிய பாரத் முத்திரை & லோகோ
- 1/3 பங்கில் நிறுவனத்தின் பெயர் மற்றும் பிற தகவல்கள் இடம்பெறும்.

**முக்கியத்துவங்கள்**

- உரங்களை தரப்படுத்தல்
- கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்
- ஒற்றை முத்திரை
- சரக்கு கட்டணம் குறைவு

**சவால்கள்**

- விநியோகத் திட்டங்கள்
- உலகளாவிய இறக்குமதி சிக்கல்கள்

**17) ஆர்டிமஸ் திட்டம் பற்றி கூறுக.**

**நாசாவின் ஆர்டிமிஸ் திட்டம்** 2

**நோக்கம்**

- 2024ஆம் ஆண்டுக்குள் மனிதர்களை குறிப்பாக முதல் பெண் நபரையும் தரையிறக்குதல்
- புதிய தலைமுறை ஆய்வாளர்களை ஊக்குவித்தல்

**ஏவு – இராக்கெட்** 1

- SLS - உலகின் சக்திவாய்ந்த ராக்கெட் மூலம்
- 2,80,000 மைல்கள் பயணத்தின் போது நான்கு முதல் ஆறு வாரங்கள் பயணிக்கும்

**ஆர்டிமிஸ் – I** 3

- சந்திரனைச் சுற்றியுள்ள ஓரியன் விண்கலத்தின் குழுமமற்ற விமான சோதனையாகும்.

**ஆர்டிமிஸ் – II**

- ஓரியன் விண்கலத்தில் குழும விமான சோதனை

**சிறப்புகள்**

- பெண்கள் பங்கேற்பு
- செவ்வாய் கிரக ஆய்விற்கு வழிவகுக்கும்
- சந்தைப் பொருளாதாரம்

**18) பணமோசடி தடுப்புச் சட்டத்தில் சமீபத்திய திருத்தங்கள் பற்றி கூறுக.**

**பணமோசடி தடுப்புச்சட்டம் 2002** 3

- பணமோசடியை தடுக்கவும் பணமோசடி மூலம் பெறப்பட்ட சொத்துக்களை முடக்கவும் ஜுலை 1, 2005இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- அமலாக்க இயக்குநரகத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட திருத்தப்பட்டது.

**2019 திருத்தங்கள்** 3

- பண மோசடி சட்டம் 2002 விதிகளில் உள்ள இடைவெளி குறைத்தல்
- பணமோசடி சட்டத்தில் பிரிவு – 3 ஐ தெளிவாக்குகிறது.
- நபர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிந்தோ அல்லது தெரியாமலோ பணமோசடி செய்த குற்றத்திற்கு குற்றவாளியாக கருதப்படுவார்.
- பிரிவு 17 (1) & 18 (1) நீக்கப்பட்டு விட்டது.
- சி.ஆர்.பி.சி பிரிவு 157இன் கீழ் அறிக்கை இல்லாத போதும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ள அமலாக்க இயக்குநரகத்திற்கு அதிகாரம்
- பணமோசடி தவிர பயங்கரவாத நிதியை எதிர்த்துப் போரிடும் இலக்கு கொண்டது.
- 5 லட்சம் அபராதத்திற்கு பதிலாக சொத்தை பறிமுதல் செய்வதற்கு அதிகாரம்.

**அலகு – 2**

**1) நான்காம் தொழிற்புரட்சி என்றால் என்ன? 5G தொழில்நுட்பம் எவ்வாறு நான்காம் தொழிற்புரட்சியை இந்தியா அடைவதற்கு உதவி செய்யும் என்பதை விளக்குக**

**நான்காவது தொழில் புரட்சி** 2

- மின்னணுவியல் சார்ந்த தொழிற்சாலையில் இருந்து நகர்ந்து மனிதன் மற்றும் மின்னணுவியல் சார் தொழிற்சாலை நுகர்வு

**முக்கியத்துவம்**

- இயற்பியல், டிஜிட்டல் மற்றும் உயிரியல் சார் வட்டாரங்களை அதன் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல்

**5ஜி தொழில்நுட்பம்**

- தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் வரிசையில் தற்போது கம்பியில்லா தொலைத்தொடர்பு – 5ஜி தொழில்நுட்பம்

SURESH

- அதிவேக தரவு பரிமாற்றம், அதிக இணைப்பு அடர்த்தி எளிதான, வேகமான தொடர்பு

**5ஜி தொழில்நுட்பம் இந்தியாவில் 4ஆவது தொழிற்புரட்சியினால் 5**

**1. செயற்கை நுண்ணறிவு**

- 5ஜி அதிவேக தரவு கையாளும் திறன் கொண்டது.
- நொடிப் பொழுதில் தரவு கையாளுகை போன்றவற்றை ஏற்படுத்தி செயற்கை நுண்ணறிவு சாதனங்களை செயல்படச் செல்கிறது.

**2. கணினி செயல்பாடுகள்**

- 5ஜி தாமதவீதம் – 1 மில்லிய வினாடிகள் மேலும் 20 ஜி.பி.பி.எஸ் வேகம் கொண்டது.
- அதிக வேகம் கணினிகளை அதிக அளவிலான தரவுகளை கையாள வழிகாட்டுகிறது.
- குவாண்டம் கணினிகள் – கணிப்பொறிகளை வளர்ச்சி பெற்ற கணிப்புகளுக்கு உதவி செய்ய செய்கிறது.

**3. இண்டர்நெட் ஆஃப் திங்கள்**

- 5ஜி தொழில்நுட்பம் தொழில் சார்ந்த இணைப்புகளை வலுவூட்டுகிறது.
- வேகமான தேர்வுகளுக்கான குடும்பம் சார்ந்த வேளாண் சார் போன்றவற்றில் பயன்படுகிறது.

**4. சுகாதாரத் துறை**

- உயிரி தொழில் நுட்பவியல் என்பதன் வாயிலாக செல் (அ) பயோ மருத்துவ வாயிலாகவும் புதிய மருந்துகள் கண்டறிதல்
- மனித வாழ்வியல் கூறுகளை மாற்றியமைக்கும்

**5. உலகப் போட்டித்திறன்**

- கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றின் மீதான மேம்பாடுகளுக்கு வழிவகுக்கிறது.
- உற்பத்தி செயல்பாட்டை அதிகரிக்கிறது.
- இந்தியாவை சக்திவாய்ந்த முன்னணி தயாரிப்பாளராக மாற்றுகிறது.

**4ஆவது தொழில்புரட்சியின் முக்கியத்துவங்கள் 5**

- வறுமை ஒழிப்பில் முக்கியப் பங்கு
- மேம்பட்ட தொழில் நுட்பத்தால் வேளாண் வருமானம் அதிகரிப்பு
- உள்கட்டமைப்பு & இணைப்புகளை வலுப்படுத்துதல்

**முடிவுரை**

- விரைவில் மக்கள்தொகை ஈவு, தரவுகள் வளம் எளிதான விலையில் ஏற்படுத்தி 5ஜி தொழில்நுட்பம் 4ஆவது தொழிற்புரட்சியின் அறுவடையைப் பெறும்.

---

**2) 5 டிரில்லியன் பொருளாதாரம் பற்றி விளக்குக. இந்தியா அடைவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் சவால்களை பற்றிக்கூறுக**

**5 டிரில்லியன் பொருளாதாரம் 3**

- பிரதமரால் 2024ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) $ 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டுதல்
- வளர்ச்சியை மேம்படுத்துவதைக் குறிக்கிறது
- முதலீடு, நுகர்வு, ஏற்றுமதி மேலும் வேளாண்மை, உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளில் முன்னேற்றம்.
- இந்தியா உலகின் 5ஆவது பெரிய பொருளாதார நாடு (2022)

**$ 5 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைய வாய்ப்புகள் 4.5**

**1. முதன்மைத்துறை**

1. **வேளாண்மை** : வேளாண் உற்பத்தி, ஏற்றுமதி, வேளாண்சார் தொழில் துவக்கத்தில் முதலீடுகள்வன பாதுகாப்பு & நிலைத்த பயன்பாடு போன்றவற்றை வேளாண் இயற்கை முறையில் பெறுதல்
2. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் முதலீடுகள்
3. கால்நடை தொழில்நுட்பம் வாயிலாக கூடுதல் வருமானம்

**2. உற்பத்தித் துறை**

- மின்னணு, தானியங்கி மற்றும் தானியங்கி சார் உற்பத்தி பெருக்கம்
- சிறு மற்றும் குறு தொழில்களுக்கான நிதியினை மேம்படுத்துதல்

**3. சேவைத்துறை**

- இரயில் இணைப்பு மேம்படுத்தல், விசா நடைமுறைகளை எளிதாக்கி எளிதாக்கப்பட்ட பயணம் உறுதி செய்தல்
- 2024ஆம் ஆண்டுக்குள் சேவைத் துறையில் ஜி.டி.பி பங்களிப்பு 60% எட்டுதல்

SURESH'

- ஏற்றுமதி வேலை உருவாக்கம், ஐ.டி, சுற்றுலா மருத்துவ சுற்றுலாக்களில் கவனம் செலுத்த வேண்டும்.

**சவால்கள்** 4.5

**1. முதன்மைத் துறைகள்**

- மறைமுக & குறை வேலைவாய்ப்பின்மை
- பாசனத்திற்கு தேவைப்படும் அதிக தண்ணீர்

**2. இரண்டாம் நிலைத்துறை**

- போக்குவரத்து வசதி குறைபாடுகள்
- திறன் பற்றாக்குறை

**3. சேவைத்துறை**

- அதிக வேலைவாய்ப்பை தூண்டும் அளவுக்கு ஊதியம் இல்லாமை

**முடிவு**

- தனியார் பங்களிப்பு, வேளாண் துறை சீரமைப்பு, சிறந்த சுகாதாரம் போன்றவற்றின் செயல்பாடுகளால் 5 டிரில்லியன் பொருளாதாரம் எட்டலாம்.

---

**3) மெட்டாவர்ஸ் தொழில்நுட்பம் என்றால் என்ன? மெட்டாவெர்ஸ் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை விளக்குக?**

**மெட்டாவர்ஸ் தொழில்நுட்பம்** 4

- அறிவியல் புனைவுகள் அடிப்படையில் ஒற்றை, உலகளாவிய மற்றும் குறிப்பிடத்தகுந்த வாய்ப்புகள் பயன்படுத்தி மெய்நிகர் மற்றும் ஆகுமண்ட் தொழில்நுட்பங்கள் வாயிலாக எட்டுவது

**பயன்பாடுகள்**

**1. இ - வர்த்தகம்** 8

- இணைய மற்றும் சாதாரண வணிக நடவடிக்கைகள் வாயிலாக இயற்பியல் & கற்பனை உலகை இணைத்தல்
- பயனாளர்கள் அனுபவ மேம்பாடு
- நிறுவனங்களுக்கு பெரும் பயன்கள்
- அதிக நுகர்வோர் விரிவாக்கம்
- புதிய பொருட்கள் மீதான விமர்சனம் அறிதல்
- உலகளாவிய பார்வையாளர்களுடன் இணைதல்

**2. திறன் மேம்பாடுகள்**

- புதிய வேளாண் அடிப்படையிலான களங்களை பற்றி அறிதல்
- திறன் மேம்பாட்டில் புதிய பங்களிப்பு

**3. மெய்நிகர் சுற்றுலா**

- $360^{\circ}$ மெய்நிகர் சுற்றுலா
- பயணிகள் விரும்பிய பகுதிகளை டிஜிட்டல் குறுக்கீடுகள் மெய்நிகர் பார்வையாளராகலாம்.
- சுற்றுலாவிற்கு முன் பார் – சுற்றுலா
- விரும்பிய தளங்களை அடைவதற்கு முன்னால் சுற்றி பார்க்க வாய்ப்புகள்

**4. கல்வி & கற்றல்**

- மெய்நிகர் தொழில்நுட்பம் கற்றல் செயல்பாடுகளின் புதிய அனுபவத்தைத் தருகிறது.
- மாணவர்கள் உயர்தரம் வாய்ந்த வனங்கள் வாயிலான திறன் கற்றல் வாய்ப்புகள்
- திறன்வாய்ந்த தரமான கற்கும் திறன்
- எடுத்துக்காட்டுகள் மெஸ்ச் மைக்ரோசாப்ட் உருவாக்கியது.
- கலப்பு மெய்நிகர் தளம்
- முப்பரிமாண அவதார் முறையில் மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து கற்றல்

**5. சுகாதார நலன்**

- தொலை மருத்துவம் & சிகிச்சைகள்
- மருத்துவர்கள் மற்றும் நோயாளிகள் இடையே முப்பரிமாண மருத்துவமனைகள்

**6. மெட்டா உதவி டெஸ்க்**

- இ-ஆளுகைகளில் அத்யாவசிய தகவல்கள், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு மூலம் பரிமாற்றம்
- அத்தியாவசிய தரவு தேவைகளின் போது வழங்க உதவி புரிகிறது.
- இலக்கு சார் திட்டங்களின் செயல்பாடுகள்

**முடிவுரை**

- மெட்டாவெர்ஸ் தனிநபர் அந்தரங்கம், அதிகரிக்கப்பட்ட டிஜிட்டல் ஈவு, சட்டப்பூர்வ பிரச்சனைகளுடன் உலவுகிறது.
- சரியான வெளிப்படைத்தன்மை மற்றும் சட்டப்பூர்வ பாதுகாப்பு போன்றவற்ன் வாயிலாக சவால்களை சரிசெய்து கொள்ளலாம்.

**4) G20 என்றால் என்ன? இந்தியாவின் பங்களிப்பை விளக்கி அவற்றினால் ஏற்படும் தாக்கங்களை பற்றிக் கூறுக**

**ஜி20** **4**

- உருவாக்கம் – 1999
- பின்புலம் : 1990ஆம் ஆண்டு கிழக்காசிய மற்றும் தென்கிழக்காசியப் பகுதிகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக உருவாக்கப்பட்டது.

**நோக்கம்**

- சர்வதேச நிதிநிலைத்தன்மை பாதுகாப்பு
- 60% உலக மக்கள்தொகை
- 80% உள்நாட்டு உற்பத்தி
- 75% சர்வதேச வணிகம்
- இந்தியாவும் ஒரு உறுப்பினராக செயல்பட்டு 2022ஆம் ஆண்டு தலைமை ஏற்கிறது.
- 18ஆவது மாநாடு : இந்தியா (2023)

**ஜி20யில் இந்தியாவின் பங்களிப்பு** **4**

- நிதி அமைப்புகளில் மிகப்பெரிய உள்ளடக்கங்களை அறிமுகம் செய்துள்ளது.
- வளரும் நாடுகளில் வளர்ச்சித் திட்டங்களை உறுதி செய்துள்ளது.
- டிசம்பர் 1 , 2022 முதல் நவம்பர் 30, 2023 வரை இந்தியாவின் தலைமையில் செயல்படும்.
- கருதுகோள் : வாசுதெய்வ குடும்பகம்
- இந்தியாவில் வெற்றிகண்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உலக வணிக நிறுவனத்தை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.
- முதன்மையான வளர்ந்துவரும் பொருளாதாரத்தைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் சர்வதேச பொருளாதார நிலைத்தன்மை மற்றும் நிதி அமைப்பு
- நிதிச் செயல்பாட்டு நடவடிக்கைகளை இந்தியா பரிந்துரைத்துள்ளது.

**இந்தியாவில் ஜி20யின் மீதான தாக்கங்கள்** **4**

- மும்முனை பங்களிப்பினைக் கொண்ட வளர்ச்சிக்கான சூழலை ஜி20 கூட்டமைப்பு வழங்கியுள்ளது.
- JAI - ஜப்பான், இந்தியா, அமெரிக்கா
- RIC - ரஷ்யா, இந்தியா, சீனா
- பொருளாதார குற்றவாளிகளுக்கு எதிராக தங்களை வலுப்படுத்திக் கொள்ள இந்தியா இத்தளத்தை பயன்படுத்திக் கொண்டது.
- சிறப்பான நடவடிக்கைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு களமாக அமைகிறது.
- தற்போதுள்ள தலைமை சர்வதேச பரவல் காரணமாக வறுமையில் உள்ள உலகப் பொருளாதாரத்தை கட்டமைக்க உதவுகிறது.
- ஒருதலை சார்பு நடவடிக்கைகளை குறைத்து, ஒரு விரிவான இலக்கை அடைவதற்கு உதவுகிறது.

**முடிவுரை**

- தலைமைத்துவ பண்பில் இந்தியாவின் முக்கியத்துவத்தை காட்டுவதற்காக இந்தியா 2022ஆம் ஆண்டு ஜி20 கூட்டமைப்புக்கு தலைமை ஏற்கிறது.
- இது சிறந்த பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக உள்ளது.

**5) இந்தியா வங்காளதேச 7 உடன்படிக்கைகளை பற்றி கூறி குஷியாரா உடன்படிக்கை பற்றி விளக்குக.**

**7 உடன்படிக்கைகள்** **6**

1. பொதுவான குஷியாராவில் இருந்து தண்ணீர் பெறுவது
2. இரு நாடுகளின் ரயில்வே பணியாளர்களுக்கான பயிற்சியளித்தல்
3. தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுடன் இணைந்து தகவல் தொழில்நுட்ப மேம்பாடு
4. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பு
5. விண்வெளி தொழில்நுட்பத் துறையில் பரஸ்பர ஒத்துழைப்பு
6. பிரசார் பாரதி & வங்காள தொலைக்காட்சி இடையே ஒளிப்பரப்பில் ஒத்துழைப்பு
7. நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி & திறன் மேம்பாட்டு திட்டம்

**குஷியாரா ஒப்பந்தம்**

- பராக் நிதி துணையானது
- மணிப்பூர், நாகாலாந்து, மிசோரம் மற்றும் அசாம் மாநிலங்கள்

- நதிநீர் தொடர்பாக இரு நாடுகளின் ஒப்பந்தம்

**முக்கியத்துவம்** 2

- பராக் நதியின் ஓட்டம் மாறிவிட்டது
- அதிக நீர் குஷியாராவில் பாயும் வேளையில் குறைந்த அளவு நீர் மட்டுமே சர்மாவில் பாய்கிறது.
- ஒப்பந்தத்தின் மூலம் குளிர்காலத்தில் ஆற்றில் உள்ள 2500 கியூசெக் அளவில் 153 கியூசெக் நீரைதிரும்பப் பெற முடியும்.

**நன்மைகள்** 2

- சிலேட் விவசாயிகளின் தண்ணீர் நெருக்கடியை தீர்க்க முடியும்.
- போரோ நெல் சாகுபடி
- விவசாயிகள் இலாபம் : 10000 ஹெக்டேர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும்
- மில்லியன் மக்கள் பலனடைந்தனர்
- ரஹீம்பூர் கால்வாய் : 8 கி.மீ நீளமுள்ள கணவாய்
- கல்வெட்டில் உள்ள ரஹீம்பூர் கால்வாய் மூலம் பாசனம்
- இப்பகுதியில் குஷியாரோ நதிநீர் மூலம் மட்டும் நீர் பாசனங்கள்

**சிறப்புகள்** 2

**1. வெள்ளக் கட்டுப்பாடு**

- குளிர் காலத்தில் ஏற்படும் வெள்ள நடவடிக்கைகள் தடுப்புகள்
- பெருமளவிலான கூட்டுறவு மூலம் சாத்தியமாக்கப்பட்டது

**2. சில்ஹெட்**

- பங்களாதேஷ் பகுதியின் சில்ஹெட் பகுதிகள் பயனடையலாம்.

6) **சரத்து 142 என்றால் என்ன? இதனால் நிர்வாகத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே ஏற்படும் உரசல்களை விளக்கி சமீபத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளை விளக்குக**

**விதி 142** 4

- இந்திய உச்சநீதிமன்றம் அதன் முன் நிலுவையில் உள்ள எந்த ஒரு விஷயத்திலும் முழுமையான நீதி செய்யத் தேவையான உத்தரவை வழங்கலாம்.

**விதி 142இன் முக்கியத்துவங்கள்**

- அநீதியைத் தடுக்கிறது
- சட்டத்திற்கு புறம்பான முறையில் அநீதியை அனுபவித்தவர்களுக்கு முழுமையான நீதி வழங்குகிறது.
- குடிமக்கள் உரிமைகளை நிலைநாட்டுகிறது.
- அரசாங்கத்தை சரிபார்த்தல்

**சிறப்பு அதிகாரம்** 4

- உச்சநீதிமன்றத்திற்கு சிறப்பான அதிகாரம் வழங்கப்படுகிறது.

**இயற்கை நீதி**

- இயற்கை நீதியானது சட்டத்திற்கு மேலானது
- உச்சநீதிமன்றம் சட்டத்திற்கு மேலான அமைப்பு
- உச்சநீதிமன்றத்திற்கு எந்த ஒரு ஆணைகளை வழங்க முழு உரிமை உள்ளது.

**உச்சநீதிமன்ற தீர்ப்புகள்** 4

**1. மனோகர் லால் சர்மா வழக்கு**

- சட்டத்தின் ஆட்சியில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்.
- விதிவிலக்கான சூழலில் உச்சநீதிமன்றம் கையாள முடியும்.

**2. லெட்சுமி தேவி எதிர் சத்ய நாராயணன்**

- குற்றம் சாட்டப்பட்டவருக்கு திருமணம் செய்து கொள்ள உறுதி அளித்தது.
- பாலுறவில் ஈடுபட்ட பெண்ணுக்கு இழப்பீடு வழங்க உத்தரவு

**3. ஒன்றிய கார்பைடு கார்ப்பரேஷன்**

- போபால் விஷவாயு தாக்கியதில் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

**4. பேரறிவாளன் வழக்கு**

- இராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்
- விதி 161 பயன்படுத்தி 2015ஆம் ஆண்டு கருணை மனு தாக்கல் செய்தார்
- பதில் கிடைக்காததால் உச்சநீதி மன்றத்தை நாடினார்.
- 2018ஆம் ஆண்டு முதல்வர் தலைமையில் அமைச்சர்கள் குழு விடுவிக்க பரிந்துரைத்தது.

SURESH'

- 2021 – மாநில அரசின் பரிந்துரையை ஆளுநர் குடியரசுத் தலைவரிடம் அனுப்பினார்.
- குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் கோப்பு கிடப்பில் போடப்பட்டது.
- விதி 142 – பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தது.

**7) எண்ம நாணயம் என்றால் என்ன? அவற்றின் பயன்பாடுகள் பற்றி விளக்கி எண்ம நாணயத்தினால் கருப்பு பணம் ஒழிக்கப்படுகிறதா?**

**<u>எண்ம நாணயம்</u>** 3

- டிஜிட்டல் அல்லது எண்ம ரூபாய் மத்திய வங்கி டிஜிட்டல் பணம் என்று அழைக்கப்படுகிறது.
- பணம் செலுத்தும் ஒரு முறை
- காகித வடிவத்தில் இல்லாமல் மின்னணு வடிவத்தில் இருக்கும்
- புழக்கத்தில் உள்ள பணத்தின் டிஜிட்டல் பணம் தான் தவிர மதிப்பு ஏற்ற இறக்கங்கள் இல்லை.
- மத்திய ரிசர்வ் வங்கியால் கட்டுப்படுத்தப்படுகிறது.

**<u>வரலாறு</u>** 1

- பண்டமாற்று → காகிதப்பணம் → நெகிழிப்பணம் → எண்ம ரூபாய்
- எண்ம ரூபாய் ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் டிஜிட்டல் வடிவத்தைக் குறிக்கிறது.
- எண்ம ரூபாயின் முழுக் கட்டுப்பாடும் ரிசர்வ் வங்கி மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.
- ரூபாய் நோட்டுக்கள் மற்றும் நாணயத்தின் வழக்கமான செயல்பாட்டைக் கொண்டிருக்கும்.

**<u>எண்ம ரூபாய்</u>** 4

**<u>1. சில்லரை விலை அடிப்படையிலானது</u>**

- சாதாரண மக்களின் புழக்கத்திற்கு

**<u>2. மொத்த விலை அடிப்படையிலானது</u>**

- அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களுக்கு
- நவம்பர் 1, 2022 அன்று இந்திய ரிசர்வ் வங்கி மொத்த விலை அடிப்படையிலான எண்ம ரூபாய் திட்டம் அறிமுகம்

**<u>பயன்பாடுகள்</u>**

1. தற்போது நடைமுறையில் உள்ள செலாவணிக்கு கூடுதல் வலு சேர்க்கும்.
2. செலவு குறைந்த பயன்பாடு
   - காகிதம், மை போன்ற மூலப்பொருள்கள் செலவு மீதமாகிறது.
3. பாதுகாப்பானது
   - திருடுவதற்கோ அல்லது தொலைப்பதற்கோ வாய்ப்பில்லை
   - வணிக வங்கிகள் மக்களின் பரிவர்த்தனைகளை பின்தொடர வரவில்லை
4. வணிக வங்கிகளின் துணையில்லாமல் நேரடியாக ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் பரிவர்த்தனை செய்யலாம்.

**<u>கருப்புப்பணம் ஒழிக்கப்படுகிறதா</u>** 4

- ஆம், முற்றிலும் ஒழிக்கப்படுகிறது.

**<u>காரணங்கள்</u>**

- கருப்புப் பணம் மற்றும் பணமோசடிகளில் பெற்ற பணங்களுக்கு ரிசர்வ் வங்கி கணக்கு உள்ளது.
- தனிநபரின் வங்கிக் கணக்கு பரிவர்த்தனைகள் கண்காணிக்கலாம்.
- வரி ஏய்ப்பு செய்ய விதிகள் இல்லை
- காகிதப் பணம் போன்று வீடுகளில் / தோட்டங்களில் மறைத்து வைக்க வழியில்லை

**<u>முடிவுரை</u>**

- உலகம் டிஜிட்டல்மயமாக்கலை நோக்கி நகர்வதால் அதன் பயன்பாடுகள் வங்கி செயல்பாடுகளின் மூலம் வெளிப்படைத்தன்மை கொண்டு வரலாம்.

**8) பண மதிப்பு வீழ்ச்சி என்றால் என்ன? அவற்றின் தாக்கங்களை விளக்கி இவற்றினால் இந்தியப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புகளை விளக்குக?**

**<u>செய்திகளில்</u>** 3

- இந்திய ரூபாய் இந்த வருடத்தின் ஜனவரியில் இருந்து சரிவடைந்து அமெரிக்க டாலருக்கு 80 என குறைந்து வரலாற்றில் பின்னடைவு கண்டிருக்கிறது.

**<u>பணவீழ்ச்சி</u>**

- சந்தைக் காரணிகளால் பணத்தின் மதிப்பு குறைவது
- மாறுபடும் செலாவணி மாற்றுவீதத்தின் அடிப்படையில்

**<u>பலவீனமான பணத்தின் பாதிப்புகள்</u>** 3

**<u>நேர்மறை விளைவுகள்</u>**

SURESH

1. இந்திய ஏற்றுமதி

- பலவீனமான பணம் இந்திய பொருட்களை அந்நிய சந்தைகளில் விலையிழக்க செய்கிறது.

2. இந்தியாவிற்கான மலிவு பயணம்

- வாங்கும் திறன் அளவு குறைந்து வரும் நிகழ்வு

3. நடப்புக் கணக்கு பற்றாக்குறை குறைவு

- ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைவு நிகழ்வுகள்

4. இந்திய நிறுவனங்களுக்கு வெகுமதி

- அதிக ஏற்றுமதி
- உள்நாட்டு பொருட்களுடன் விலையுயர்ந்த இறக்குமதி சரக்குகள்

எதிர்மறை விளைவுகள் 3

1. இறக்குமதி விலையுயர்வு

- பல்வேறு பொருட்களுக்கான விலை அதிகமாக மாறும் இயல்பு

2. எண்ணெய் விலை உயர்வு

- எண்ணெய்க்கான அதிக தேவை ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் பாதிக்கிறது.

3. வெளிநாட்டு பயணங்களுக்கு அதிக செலவு

- வெளிநாடு பயணம் செய்ய முன்பைவிட அதிக செலவீனம் தேவைப்படுகிறது.

பல்வேறு துறைகளின் மீதான விளைவுகள் 3

1. தகவல் தொழில்நுட்பம்

- அதிக லாபங்கள்
- ரூபாய் ஈட்டுதலில் உயர்வு

2. மருந்து நிறுவனங்கள்

- மூலப்பொருட்களை ஒப்பிடும்போது ஏற்றுமதி நிகர லாபம் அதிகம்

3. எண்ணெய் & வாயு

- இந்தியா 85% எண்ணெய் & 50% வாயுவினை இறக்குமதி செய்கிறது.
- விலை உயர்வு

4. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

- எதிர்காலத்தில் கட்டுமான செலவீனம் அதிகரிக்கும் வாய்ப்பு

5. தானியங்கி தொழில்

- 10 - 20% வாகன பொருட்கள் இறக்குமதி நாட்டின் வாங்கும் திறன் பாதிக்கிறது.

முடிவுரை

- இந்திய ரிசர்வ் வங்கி பணவியல் கொள்கையை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் பணத்தின் தேய்மானத்தை கட்டுப்படுத்தலாம்.

---

9) 2022ன் இஸ்ரோவின் சாதனைகளை வரிசைப்படுத்துக.

இஸ்ரோ

- உலகின் 6ஆவது பெரிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாகத் திகழ்கிறது.

2022ஆம் ஆண்டு சாதனைகள் 12

1. அதிகுளிர் எஞ்சின் சோதனை

- க்ரையோஜெனிக் எஞ்சின் சோதனை செய்யப்பட்டது
- ஜனவரி 12, 2022 அன்று ககன்யான் திட்டத்திற்கான இயந்திரம் சோதனை வெற்றி
- 720 விநாடிகள் நடைபெற்றது.
- மகேந்திரகிரி, தமிழ்நாடு

2. சந்திராயன் – 2 சூரிய போட்டான் நிகழ்வு

- அதிக பரப்பு மென் X - கதிர் ஸ்பெக்ட்ரோமீட்டர்
- சந்திராயன் – 2 பாதையில் சோதனை
- சூரியனின் இருந்து வெளிப்படும் ஒளித்தெறிப்புகள் பற்றிய ஆய்வு வெற்றி

3. EOS - 02

- புவி சாதனை துணைக்கோள் – 2 மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆஸாதி சாட் ஏவப்பட்டது.
- எஸ்.எஸ்.எல்.வி – ஏவு ஊர்தி மூலம் ஏவப்பட்டது.
- ஆசாதி சாட் – 8 கி.மீ உடைய கனசதுர துணைக் கோள் – 75ஆவது சுதந்திர நினைவாக உருவாக்கப்பபட்டது.

4. EOS - 06

- பி.எஸ்.எல்.வி சி – 54 – ஏவு வளர்ச்சி மூலம் விண்ணில் நுழைக்கப்பட்டது.
- 8 துணைக்கோள்கள் (நானோ) சூரிய நிலைத் துணைக்கோள் பாதையில் நிறுத்தப்பட்டது.

**5. விக்ரம் – எஸ்**

- முதன் முறையாக தனியார் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட இராக்கெட்
- இஸ்ரோ அமைப்பும் ஸ்கைரூட் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து சோதனை
- அதிகபட்சம் 500 கி.கி எடையை தாங்கி செலுத்தும் திறன் கொண்டது.
- விக்ரம் எஸ், I, II & III என அடுத்தடுத்த இராக்கெட்டுகள் சோதனைக்கு உள்ளது.
- நவம்பர் – 18 அன்று சதீஸ்தவான் விண்வெளி நிலையத்தில் இருந்து ஏவப்பட்டது.

**6. RH - 200**

- நவம்பர் 24, 2022 அன்று கேரளாவின் தும்பா கடற்கரையில் இருந்து ஏவப்பட்டது.
- தொடர்ச்சியான 200ஆவது ராக்கெட் ஏவும் முயற்சியாக ஏவப்பட்டது.
- தும்பா நடுக்கோட்டு ராக்கெட் ஏவுதளத்தின் தளத்திலிருந்து செலுத்தப்பட்டது.

**7. எல்.வி.எம். –3 ராக்கெட்**

- இஸ்ரோ 36 ஒன் வெப் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது.
- எல்.எம்.வி அதிக எடை கொண்ட ராக்கெட் ஆகும்.
- முன்பு ஜி.எஸ்.எல்.வி எனப்பட்டது (GSLV MK III)

**10) தேசிய குற்ற பிரிவு பணியகம் பற்றி கூறி அவற்றின் செயல்பாடுகளை விளக்கி, சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைகளை பற்றி கூறுக.**

**தேசிய குற்றப்பிரிவு பணியகம்** 2

- துவங்கப்பட்ட ஆண்டு 1986
- பரிந்துரைத்த அமைப்பு
- தேசிய காவல் ஆணையம் (1977 – 81) தந்தோன் கமிட்டி
- உள்துறை அமைச்சகத்தின் செயல் பணியகம் (1985)

**நோக்கங்கள்** 4

- குற்றவியல் மற்றும் குற்றங்கள் தொடர்புடைய தகவல் களஞ்சியமாக செயல்படுதல்
- தேசிய அளவிலான குற்றங்களின் கைரேகைக் களஞ்சியமாக செயல்படுதல்

**செயல்பாடுகள்**

- பாலியல் குற்றவாளிகள் தொடர்புடைய தேசிய அளவிலாக தரவுதளத்தை உருவாக்கி மாநிலங்களுடன் பகிர்தல்
- இணையதள குற்றங்களுக்கான தரவு தளத்தை இயக்குவதற்கான முதன்மை முகமை
- பரிமாறிக் கொள்ளக்கூடிய குற்றவியல் நீதித்துறை அமைப்பை செயல்படுத்துதல் & பொறுப்பு
- 5 தூண்கள் முறையை ஒருங்கிணைத்தல்

1. காவல்துறை
2. மின் – தடவியல் துறை
3. மின் – நீதிமன்றங்கள்
4. மின் – வழக்கறிஞர்
5. மின் – சிறைச்சாலை

- 2017 – ஆகஸ்ட் – தேசிய டிஜிட்டல் போலீஸ் தரவுதளத்தை அஷீமுகம் செய்தது

**சமீபத்திய அறிக்கைகள்** 6

**1. விபத்து மற்றும் தற்கொலை அறிக்கை 2021**

- பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களை உள்ளடக்கிய அறிகை

**2. பெண்களுக்கு எதிரான குற்றங்கள்**

- 56.5%லிருந்து 64.5% (2021)ஆக உயர்வு
- 31.8% கணவர் அல்து குடும்ப உறுப்பினரால் துன்பங்கள் / அச்சுறுத்தல்
- 7.40% கற்பழிப்பு பதிவு
- அசாம், ஒடிசா, ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களில் அதிக குற்ற சம்பவங்கள்
- சென்னை & கோயம்புத்தூரில் குறைவு
- வரதட்சணை இறப்புகள் – 270 வழக்குகள்
- 6589 சம்பவங்கள் பதிவு

**3. தற்காலை விகிதம்**

- 2020 – 21களில் 7.17% அதிகம் பதிவானது.
- தினசரி வருமான பிரிவினர் 11.52% அதிகம்
- குடும்ப காரணங்கள், திருமண பிரச்சனைகள்

**4. குற்ற சம்பவ விகிதம்**

- கடத்தல் சம்பவங்கள் 20% அதிகரித்துள்ளது.
- 2021இல் கொலை 29,272/-
- குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் - 1.49 லட்சம் பதிவானது
- சிக்கிம், கேரளா, ஹரியானா - அதிகப்படியான மைனர் குற்றங்கள் பதிவானது.

**11) சர்வதேச பசி குறியீடு என்ன? சர்வதேச பசிகுறியீட்டில் இந்தியாவின் நிலையை பற்றிவிளக்கி, இந்திய அரசு அந்த குறியீட்டை ஏற்றுக் கொள்ளாததற்கான காரணத்தை விளக்குக.**

**உலக பட்டினிக் குறியீடு** 2

**வெளியிடும் அமைப்பு**

- கன்சர்ன் வேர்ல்டு வைட்
- 2006ஆம் ஆண்டு முதல் வெளிவிட்டு வருகிறது.
- சமீபத்தில் 17ஆவது பட்டினிக்குறியீடு 2022இல் வெளியிடப்பட்டது

**நோக்கங்கள்** 4

- உலக, தேசிய மற்றும் உள்ளூர் அளவில் பட்டினியை அளவிட்டு பின்தொடர்வதற்கு வாய்ப்புகள்
- பசி பட்டினிக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- ஐ.நா 2030 ஆம் ஆண்டுக்குள் பூஜ்ஜிய பட்டினி அளவு இலக்கு - 2


**இந்தியாவின் நிலைப்பாடு**

- இந்தியா தரம் - 107 / 121
- 29.1% என்ற அளவுக்கு கடுமையான பிரிவில் உள்ளது

**துணைக்கூறுகள்**

- ஊட்டச்சத்து பிரச்சினை - 33.33%
- குழந்தை குறைபாட்டு பிரச்சனைகள் - 16.66%
- குழந்தை உடல் நலம் குன்றுதல் - 16.66%
- குழந்தை இறப்பு - 33.33%

**இந்தியா எதிர்ப்பதற்கான காரணங்கள்** 6




**1. குறுகிய மக்கள் கணக்கெடுப்பு**

- நாட்டின் தோராயமாக 2000 மக்களிடம் கணக்கெடுப்பு நிகழ்த்தியதாக கூறி புறக்கணிக்கிறது.
- 121 கோடி மக்கள் தொகையை கொண்ட நாட்டில் 0.01% மக்களிடம் கணக்கெடுப்பு

**2. குழந்தை நலம் முன்னிறுத்தல்**

- 4இல் 3 பரிமாணங்கள் குழந்தை உடல் நலத்தை இறப்பை குறிக்கிறது.

**3. சரியான புள்ளி விவரமின்மை**

- இந்தியா உணவு உதவி வழங்கும் இலங்கை போன்ற நாடுகள் முதல் 100 இடங்களுக்குள் உள்ளது.
- முறையான அரசு புள்ளி விவரங்களைப் பெறவில்லை எனப் புகார்.

**4. தவறான அணுகுமுறை**

- உணவு, தரம் போன்ற முக்கிய குறியீடுகளை பட்டியலிடப்படவில்லை
- சுகாதாரம், தொடர்புடைய குறியீட்டை பட்டினிக் குறியீடு என அடையாளப்படுத்துவதாக புகார்.

**12) DMH 11 என்றால் என்ன? GEAC, DMH 11க்கு ஏன் அனுமதி அளித்தது என்பதை விளக்கி, உச்சநீதிமன்றம் சமீபத்தில் அளித்த வழிகாட்டுதல்களை விளக்குக.**

**DMH 11** 3

- Dhara Mustard Hybrid
- மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகு
- பூச்சிக் கொல்லிகளை எதிர்ப்பதற்கான மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகு வகை

**மரபணு மாற்றம்** 1

- மண் பாக்டீரியம் – பேசில்லஸ் அமிலோலிக் பேசில்லஸ் மூலம் 2 அயல் ஜீன்கள்
- அதிக மகசூல் தரும் கலப்பின வகை கடுகு வகைகள் உற்பத்தி
- மரபணு மாற்றப்பட்ட தாவர பயிர்களுக்கான நிறுவனம், டெல்லி பல்கலைக்கழகம்

**மரபணு மாற்றப்பட்ட பயிர்களுக்கான தேவைகள்**

- பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி சமாளிக்க
- பூச்சி அரிமானம் மற்றும் களைகளில் இருந்து பயிர்களை பாதுகாக்க
- குறைந்த ஈடுபொருட்களில் அதிக மகசூல் ஈட்டுவதற்கான தேவை
- விவசாயிகளை கடும் பயிர் சேதங்களில் இருந்து பாதுகாக்க

**உச்சநீதிமன்றத்தின் சமீபத்திய வழிகாட்டல்கள்** 5

- சுற்றுச்சூழல் சீர்கேடுகளை ஏற்படுத்தும் வண்ணம் உள்ள மரபணு பயிர்கள் மீது அரசு தொடர் கவனம் செலுத்த வேண்டும்.
- உணவுப் பயிர்களில் மரபணு மாற்ற செயல்பாடுகள் அவ்வப்போது ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- பொது மக்களின் கருத்திற்கு ஏற்ப அரசு உணவுப் பொருள் மரபணு மாற்றத்தில் முடிவு எடுக்க வேண்டும்.
- உயர்தர ஆய்வகங்கள் மூலம் ஆய்வு நடத்த வேண்டும்.

**தொழில்நுட்ப நிபுணர் குழுவின் அறிக்கை 2013** 3

- உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவாகும்.
- பயிர்களுக்கு ஏற்ற இடத்தை தீர்மானிக்கும் வரை மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் மீதான எவ்வித கள ஆய்வும் மேற்கொள்வதற்கான அனுமதி இல்லை.
- Bt கத்திரிக்காயின் வெளியீட்டுக்கான அனுமதி இல்லை.
- இவை நிலையற்றதாகவும், இந்தியாவிற்கு பொருத்தமற்ற பயிராகவும் கருதப்படுகிறது.
- இந்தியாவில் வணிக ரீதியாக மரபணு மாற்றப்பட்ட பருத்தி சாகுபடி மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.
- உணவு மற்றும் மரபற மாற்றப்பட்ட பயிர்களின் அறிமுகத்திற்கு முன்பே அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**அலகு - 3**

**1) சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவின் நிலையையும், சுதந்திரத்திற்கு பின்பு இந்தியாவின் நிலையையும் ஒப்பிட்டு, 2047ல் இந்தியா முன்னேற வேண்டிய துறைகள் பற்றி விளக்குக**

**இந்திய சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும்** 3

- 15 ஆகஸ்ட் 1947ஆம் ஆண்டு முதல் இந்தியா பல துறைகளில் பின்தங்கியிருந்தாலும் அறிவியல் தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் மனிதவள மேம்பாடு போன்ற துறைகளில் முன்னேறியுள்ளது

**அறிவியல் & தொழில்நுட்பம்** 2

- 1947களில் இந்தியா உடைந்த நிலையில், பொருளாதார ஸ்திரத்தன்மையின்றிகாணப்பட்டது.
- இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஆரியபட்டா - 1975
- விண்வெளி மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் துறையில் உலக நாடுகளுக்கு இணையாக வளர்ந்துள்ளது.

**பொருளாதாரம்** 5

- 1947இல் உலக பொருளாதாரத்தில் இந்தியா 3% கொண்டிருந்தது.
- ஜி.டி.பி.யில் 2.7 லட்சம் கோடிகள்
- தற்போது இந்தியா உலகின் வளர்ந்த 5ஆவது பெரிய பொருளாதார நாடாக உள்ளது.
- 8% உலக ஜி.டி.பி
- 147 லட்சம் கோடிகள்

**உட்கட்டமைப்பு**

- 1951இல் 0.399 மில்லியன் கி.மீ சாலை இணைப்புகள் 2015இல் 4.70 மில்லியன் கி.மீ ஆக வளர்ந்தது.
- தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு-24000 கி.மீலிருந்து 1,37,625 கி.மீ ஆக 2021இல் உயர்ந்தது.
- ஆற்றல் உருவாக்கும் திறன்
- 1362 மெகாவாட் (1947) தற்போது தோராயமாக 4 லட்சம் மெகாவாட் திறன் உற்பத்தி
- ஊரக மின்சாரம் இணைப்பு பெருக்கப்பட்டது.

<u>மனிதவள மேம்பாடு</u>

- கல்வியறிவு வீதம் 12% லிருந்து 74.04% ஆக உயர்ந்தது.
- வாழ்நாள் எதிர்பார்ப்பு வீதம் 32லிருந்து 70 என உயர்ந்துள்ளது.

<u>கல்வியறிவு & சுகாதாரம்</u>

- கல்வியின் தரம் இன்றளவும் கவனத்திற்குரியதாக உள்ளது.
- உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையின்படி 1000 நபர்களுக்கு 2.5 மருத்துவர்கள் தேவை
- இந்திய நிலை 0.7 மருத்துவர்கள்

<u>2047 ஆண்டுக்குள் முன்னேற்ற வேண்டிய துறைகள்</u> 5

- 2022 ஆகஸ்ட் 15, சுதந்திர தின விழாவில் பாரத பிரதமர், நாம் அனைவரும் 2047களில் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பாடுபட வேண்டும் என கூறியுள்ளார்

<u>1. பொருளாதாரம்</u>

- பொருளதாரத்தில் கட்டமைப்பு மாறுபாடு ஏற்படுத்தல்
- இரண்டாம் நிலை & சேவை துறைகளில் அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தல்
- தலா வருமானத்தை அதிகப்படுத்துதல்

<u>2. அரசாங்க செலவீனங்கள்</u>

- வளர்ந்த நாடுகளுக்கு இணையாக சுகாதாரம் & கல்வியில் பொதுச் செலவை அதிகரிக்க வேண்டும்.
- ஊழலைக் கட்டுப்படுத்த வலுவான நடவடிக்கைகள்

<u>3. தலசுய அரசாங்கம்</u>

- உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கான நகர்ப்புற திட்டமிடல் நடவடிக்கைகள்

<u>4. வளங்களின் திறம்பட பயன்பாடு</u>

- இயற்கை, மனித மற்றும் மூலதன வளங்கள் திறம்பட உபயோகித்தல்
- டிஜிட்டல் ஈவு – பிரச்சனைகளை சரிசெய்தல்

<u>முடிவுரை</u>

- மனிதவள தரத்தை மேம்படுத்துதல் என்பது தலா வருமான உயர்வுடன் சேர்ந்து 2047ஆம் ஆண்டு இலக்கினை அடைய உதவியாக இருக்கும்.

**2) இந்தியாவின் வறுமை நிலையை விளக்குக. இலவச கலாச்சாரம் என்றால் என்ன? அவற்றின் தாக்கங்களை விளக்கி இலவச கலாச்சாரத்திற்கும் நலத்திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை குறிப்பிடுக**

<u>இந்தியாவில் வறுமை அளவு</u> 2

- வறுமை – குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை அடைய இயலாமை – உலக வங்கி

<u>2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி</u>

- இந்திய மக்கள்தொகையில் 21.9% பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்.
- தோராயமாக 27 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்.

<u>நிதி ஆயோக்கின் தேசிய பல்பரிணாம வறுமைக் குறியீடு</u> 2

- ஏறக்குறைய 4இல் 1 இந்தியர் பல்பரிமாண வறுமைக் குறியீட்டில் உள்ளார்
- ஊரக வறுமை 30%

<u>இலவச கலாச்சாரம்</u> 1

- அரசியல் கட்சிகள் மின்சாரம், தண்ணீர் இலவசமாக கொடுப்பதாக வாக்களிப்பது
- வேலையில்லாதோர், தினக்கூலி பணியாளர்கள் மற்றும் பெண்களுக்க மாதாந்திர உதவித்தொகை அளிப்பது.

<u>இலவசங்களின் விளைவுகள்</u> 3

<u>நேர்மறை விளைவு</u>

<u>1. சமூக முதலீடு</u>

- ஏழைகளுக்கு உதவுகிறது.
- சில செலவுகள் ஒட்டுமொத்த பலன்களை கொண்டிருக்கும்
- பொது விநியோக முறை, வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்

<u>2. வளர்ச்சி குறைந்த மாநிலங்களுக்கு உதவுகிறது.</u>

- குறைந்த வளர்ச்சியுடைய வறுமையில் அதிக மக்கள்தொகை மாநிலங்களுக்கு
- அவர்களின் மேம்பாட்டிற்கு

SURESH'

**3. சிறந்த தொழிலாளர் மற்றும் உற்பத்தித் திறன்**

- மடிக்கணினி கல்விக்கான அடிப்படை தேவையாக மாறியது.

**எதிர்மறை விளைவு** 2

**1. பேரளவு பொருளாதார நிலைப்புத் தன்மையின்மை**

- பெரிய அளவில் அரசாங்க செலவுகள் பொது செலவினங்களில் அதிக அழுத்தம்

**2. மாநிலங்களின் நிதிநிலைமை மீதான தாக்கம்**

- பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடை
- அரசு கருவூலத்தில் இருந்து செலவிடப்படுகிறது.

**3. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு எதிரானது**

- வாக்காளர்களை கவருகிறது
- முடிவெடுப்பதை பாதிக்கிறது

**4. சுற்றுச்சூழலிருந்து சிறிது தூரம்**

- சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தை பாதிக்கும் வீண் செலவுகள்

**5. கடன் கலாச்சாரம் குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது.**

- தொழிலாளர் பங்கேற்பு வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்

| இலவச கலாச்சாரம் | நலத்திட்டம் 5 |
|---|---|
| இது இலவசம், நபர்கள் எதுவும் செலுத்த வேண்டியது இல்லை | குறிப்பிட்ட பொருடகள் & சேவைகளை மானிய விலையில் வழங்க வேண்டும் |
| மக்கள் குறைவாக உற்பத்தி செய்கின்றனர். | மக்களை ஊக்கபடுத்தி உற்பத்தியை அதிகரிக்கிறது. |
| அரசு வருவாயில் கணிசமான இழப்பு ஏற்படுகிறது | அரசின் வருவாயை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டது. |
| நடுத்தர கால மற்றும் நீண்ட கால உற்பத்தியை ஆதரிக்காது. | நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தும்பொழுது கொள்கை தலையீடு |

**முடிவுரை**

- குடிமக்களின் அடிபபடைத் தேவைகளை மையமாகக் கொண்ட திட்டங்கள் அவற்றை பூர்த்தி செய்ய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

**3) COP27 என்றால் என்ன? COP27ன் முக்கியத்துவத்தை விளக்கி இந்தியாவின் பங்கினை பற்றி குறிப்பிடுக.**

**காலநிலை மாற்றத்திற்கான உச்சி மாநாடு** 3

- ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் உள்ள அனைத்து நாடுகளின் வருடாந்திர கூட்டமைவு
- முதல் சுட்டம் – பெர்லின், ஜெர்மனி – 1995
- 27ஆவது மாநாடு – ஷர்ம் எல் ஷேக் 2022
- பருவநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் முந்தைய கூட்டத்தில் செயல்படுத்திய முடிவு குறித்த ஆய்வு

**இந்தியாவின் பங்கு** 3

- இந்தியா 2070க்குள் பூஜ்ய கார்பன் உமிழ்வை அடையும் என கிளாஸ்கோ மாநாட்டில் தெரிவித்தது.
- இந்தியா தனது நீண்டகால குறைந்த உமிழ்வு வளர்ச்சியை சமர்ப்பித்துள்ளது.
- முக்கிய பொருளாதார துறைகளில் குறைந்த கார்பன் மாற்றம் பாதைகளை குறிக்கிறது.
- புதிய முயற்சி
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
- எத்தனால் கலந்த எரிபொருள்
- பசுமை ஹைட்ரஜன்
- வலுவான சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்க முயல்கிறது.
- சர்வதேச சோலார் கூட்டமைப்பு
- பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்பு கூட்டணி
- LIFE பணி தொடங்கப்பட்டது.
- சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை
- இந்தியா அதன் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு இலக்குகளை மேம்படுத்தியது.

SURESH

**COP27இன் முக்கியத்துவம்** 9

**1. இழப்பு மற்றும் சேதங்கள்**

- உமிழ்வுகளுக்கு முக்கிய பொறுப்பான பணக்கார மற்றும் வளர்ந்த நாடுகள்
- ஏழை நாடுகளுக்கு செலுத்த வேண்டிய செலவினங்களைக் குறிக்கிறது.
- ஏழை நாடுகள் (மாசுபாட்டிற்கு மிகக் குறைவான பங்களிப்பு செய்த நாடுகள்)

**2. மாசுபடுத்துவோருக்கான கொள்கை**

- மாசுபடுத்துபவர்கள் மறுசீரமைப்புக்கான செலவை மட்டுமல்ல
- அவர்களின் செயல்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பால் பாதிக்கபபட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு பொறுப்பாகும்.

**3. வளரும் நாடுகளுக்கு நிதி**

- குறைந்த கார்பன் மாற்றங்கள்
- தவிர்க்க முடியாத தட்ப வெப்ப நிலைக்கு தாங்கும் தன்மையை உருவாக்குதல்
- காலநிலையால் தூண்டபட்ட தாக்கங்களால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதம்

**4. காலநிலை நிதி**

- வளரும் நாடுகளில் சாதகமான காலநிலை நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க நிதி ஓட்டங்களை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இது பொது நிதியை தவிர மற்ற இணைப்பு மூலம் நிதிரய ஊக்கப்படுத்துகிறது.

**5. இழப்பு மற்றும் சேதத்துடன் தொடர்புடைய சவால்கள்**

- இது பெரும்பாலும் தடுப்பு மற்றும் பேரழிவிற்கு முந்தைய தயாரிப்புகளை உள்ளடக்கியது.
- இழப்பு மற்றும் சேதத்தை இணைக்கிறது.

**முடிவுரை**

- தற்போதைய உறுதிமொழியை நிறைவேற்றுவது, வெளிப்படைத்தன்மை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது.

**4) EWC என்றால் என்ன? இந்தியாவிற்கு EWC தேவையா என்பதை விளக்கி சமீபத்திய உச்சநீதிமன்ற தீர்ப்பு பற்றி கூறுக.**

**பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு ஒதுக்கீடு** 3

- 103ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 2019, 10% இடஒதுக்கீடு வழங்கியது.
- அரசியலமைப்பில் 15 (6), 16 (6) இணைத்தது.
- ஒதுக்கீட்டில் கீழ் உள்ளவை பெறப்படுகிறது.
- உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை
- மத்திய அரசு வேலைகளில் தொடக்க ஆள்சேர்ப்பு
- 50% இடஒதுக்கீடு கொள்கையில் கீழ் வராத ஏழைகளின் நலனை மேம்படுத்துவதற்கு
- மத்திய மற்றும் மாநில அரசு இரண்டும் இடஒதுக்கீடு வழங்கலாம்.

**உச்சநீதிமன்ற தீர்ப்பு** 3

- உச்சநீதிமன்ற அரசியலமைப்பு அமர்வானது 3:2 பெரும்பான்மையுடன் 103ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் செல்லுபடியை உறுதி செய்தது.

**முக்கிய வாதங்கள்** 3

**பெரும்பான்மை கருத்து**

- பொருளாதார அளவுகோல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட இடஒதுக்கீடு அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை மீறாது.
- பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரை ஒரு தனி வகுப்பாக கருதுவது நியாயமான வகைப்பாடு
- சுதந்திரமடைந்த 75 ஆண்டுகளான நிலையில் சமூக நலன் கருதி இடஒதுக்கீடு முறையை மறுபரிசீலனை செய்ய ஏற்ற தருணம்.
- இடஒதுக்கீடு என்பது முடிவல்ல. இடஒதுக்கீடு என்பது கந்துவெட்டியாக மாற அனுமதிக்கக் கூடாது.

**முக்கியத்துவம்** 6

**1. சமத்துவமின்மையை நிவர்த்தி செய்கிறது.**

- முற்போக்கானது
- கல்வி மற்றும் வருமான சமத்துவமின்மை பிரச்சனைகளை தீர்க்கமுடியும்.

**2. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான அங்கீகாரம்**

- பல்வேறு மக்கள் மற்றும் வகுப்பினர்கள் பசி, வறுமையில் வாடும் நிலைமையில் உள்ளனர்.
- உயர் சாதியினரை சேர்ந்த ஏழைகளுக்கு அரசியலமைப்பு அங்கீகாரத்தை அளிக்கும்.

**3. ஜாதி அடிப்படையிலான பாகுபாட்டை குறைத்தல்**

- இடஒதுக்கீடு என்பது வரலாற்று ரீதியாக ஜாதியுடன் தொடர்புடையது.
- இடஒதுக்கீட்டின் மூலம் வருபவர்களை உயர் ஜாதியினர் இழிவாக பார்ப்பதாலும் இடஒதுக்கீடு தொடர்பான இந்த தீர்ப்பானது இது போன்ற களங்கத்தை படிப்படியாக நீக்கும்.

**இட ஒதுக்கீட்டில் உள்ள சிக்கல்கள்**

**1. பொதுவகைக்குள் குறைப்பு**

- 50% வரம்பை மீறுவதுடன் பொதுப்பிரிவில் குறைக்கிறது.

**2. வருமான வரம்பை மீறிய தன்னிச்சை**

- ஆண்டிற்கு 8 லட்சம் வரை வருமானம் ஈட்டுபவர்களாக இருக்க வேண்டும்.
- பாலாடை பிரிவினரை தவிர்த்து அதே எண்ணிக்கையில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் ஒதுக்கீட்டின் பலன்களை வளங்களிலிருந்து விலக்கு அடைகிறது.

**3. சமூக பொருளாதார பின்தங்கிய நிலை**

- இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என வகைப்படுத்தப்பட்டவர்கள் போல் அல்லாமல் சமூக அல்லது கல்வியில் பின்தங்கிய நிலையால் பாதிக்கப்படுவது இல்லை.

**முடிவுரை**

- பொருளாதார பின்தங்கிய நிலை தகுதியைத் தடுக்கிறது. இந்தியாவில் ஒரு உண்மையான பிரச்சினை .எனவே EWS ஒதுக்கீட்டை முழுமையாக நிராகரிக்க முடியாது.

**5) ஆளுநர் மத்திய அரசின் பிரதிநிதியா அல்லது அரசியலமைப்பின் பிரதிநிதியாக செயல்பட வேண்டுமா என்பதை விளக்கி சமீபத்தில் ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் ஏற்பட்ட உரசல்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

**ஆளுநர் ஒன்றிய அரசின் பிரதிநிதி** 1

- ஆளுநர் ஒன்றிய அரசின் முகவராகச் செயல்படுகிறார்.

**நியமனம் (விதி 155)** 7

- ஆளுநர் முழுவதுமாக குடியரசுத் தலைவரின் சுய உரிமை மற்றும் விருப்பமாகும்.
- குடியரசுத் தலைவர் விரும்பும் வரை மட்டுமே பதவி வகிக்க இயலும்.
- வயது தவிர வேறு எந்த தகுதிப்பாடுகளும் அரசியலமைப்பில் விளக்கப்படவில்லை.

**விதி 163**

- சுயவிருப்புரிமை தவிர அனைத்து விவகாரங்களிலும் மாநில அமைச்சரவை ஆலோசனையின்படி செயல்படுகிறார்.
- ஒன்றிய அரசின் நியமனம் மற்றும் தன்னிச்சை அதிகாரத்தில் மாநில விவகாரங்களில் ஒன்றிய அரசு தலையிட வாய்ப்பு உள்ளது.

**விதி 356**

- ஆளுநர் மாநிலம் அரசியலமைப்பின்படி செயல்பட முடியாமல் போகும்போது குடியரசுத் தலைவரிடம் அறிக்கையளிக்கிறார்
- ஒன்றிய அரசால் இந்த தன்னிச்சை அதிகாரம் தவறுதலாக பயன்படுத்த வாய்ப்பளிக்கிறது.

**ஆளுநர் அரசியலமைப்பின் பிரதிநிதி**

1. மாநில அரசின் தலைவராக செயல்படுகிறார்.
2. ஆளுநருக்கு இரட்டை பங்களிப்பு

- மாநில அரசின் தலைவராக அமைச்சர் குழுவின் முடிவுகளால் கட்டுப்படுத்தப்படுகிறார்.
- ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே இணைப்பாகவும் செயல்படுகிறார்.

3. கூட்டாட்சியின் சுமூகமான செயல்பாடு

- ஒன்றிய மற்றும் மாநில அரசின் இணைப்பு பாலமாக செயல்படுகிறார்.

4. விதி 153 ஆனது ஒரு மாநில அரசிற்கு நிர்வாகத் தலைவராக ஒரு ஆளுநர் இருக்க பரிந்துரைக்கிறது

- 7ஆவது அரசியலமைப்புத் திருத்தம் 1956ஆம் ஆண்டு திருத்தம் பெற்றது.

5. தன்னிச்சையான அதிகாரம்

- ஆளுநர் அரசியலமைப்பு ரீதியாகவும் தன்னிச்சையான சூழ்நிலை ரீதியான அதிகாரம் கொண்டுள்ளார்.

- அரசியலமைப்பில் இணக்கமான தன்மையை உறுதி செய்தவதற்காக
- விதி 161 – மன்னிக்கும் அதிகாரம் வாயிலாக குடிமகனின் அடிப்படை உரிமைகள் பாதுகாப்பது உறுதி செய்யப்படுகிறது.

**ஆளுநர் & முதலமைச்சருக்கு இடையேயான பிரச்சனைகள்** **6**

1. **மேற்கு வங்காளம்**

- ஆளுநர் மாநிலத்தின் காவல்துறை தலைவர் மற்றும் தலைமைச் செயலரை பணி விவரம் குறித்து அடிக்கடி அழைத்துள்ளார்.
- சட்டசபை சபாநாயகருடன் பிணக்குகள்
- உள்ளாட்சி தேர்தல்கள் குறித்த மசோதாவின் ஒப்புதலை தராமல் நிறுத்திவைத்தார்.

2. **மஹாராஷ்ட்ரா**

- 2021ஆம் ஆண்டிலிருந்து சட்டசபை சபாநாயகர் தேர்தல் தாமதப்படுத்தினார்.
- சட்டமேலவையில் முதல்வர் மற்றும் அமைச்சர் குழுவின் நியமனத்தை புறக்கணிததார்.

3. **தமிழ்நாடு**

- தமிழ்நாடு அரசு மருத்துவ இளநிலை நுழைவுத் தேர்வில் அனுமதிக்க தாமதப்படுத்தினார்.
- மாநில சட்டமன்றத்தின் சட்டம் இயற்றும் செயல்பாடுகள் தடைப்பட்டது.

4. **கேரளா**

- மாநில பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்தில் எல்லை மீறிய செயல்பாடுகள் என முதல்வர் மற்றும் அமைச்சர்கள் எதிர்ப்பு தெரிவிததனர்.

5. **இதர பிரச்சனைகள்**

- பெரும்பான்மை உறுதி செய்ய கோரும் போது ஆளுநர் தன்னிச்சை அதிகாரத்தை அனுபவிக்கிறார்.

**முடிவுரை** **1**

- ஆளுநர் மாநில நிர்வாகத்தை திறம்பட கையாளவும் ஒன்றிய அரசின் பிரதிநிதியாகவும் செயல்பட்டு இணக்கமாக விளங்க வேண்டும்.

**6) நவம்பர் 15, 2022ல் 8 பில்லியன் மக்கள் தொகையை தாண்டியது உலகம், இந்தியா 2023ல் சீனாவை விஞ்சும் என்று ஐ.நா நிறுவனம் கணித்துள்ளது. மக்கள்தொகை பெருக்கம் வரமா சாபமா என்பதை விளக்குக.**

**ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியம்** **2**

- இது உலக மக்கள்தொகையில் 8 பில்லியனை எட்டியது என்றும் 7 பில்லியனிலிருந்து இதனை அடைய 12 ஆண்டுகள் எடுத்துக் கொண்டது என்றும் கூறுகிறது

**வளர்ச்சிக்கான காரணங்கள்** **6**

- பொது சுகாதாரம், ஊட்டச்சத்து, மருந்து ஆகியவற்றை வளர்ச்சியால் ஆயுட்காலம் படிப்படியாக அதிகரித்துள்ளது.
- சில நாடுகளில் அதிக மற்றும் நிலையான கருவுறுதல் நிலை.
- இந்தியாவின் மக்கள்தொகை
- ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியம்படி இந்தியாவின் மக்கள்தொகை வளர்ச்சி நிலையானதாகவும், ஆண்டிற்கு 0.7% வளர்ச்சி கொண்டுள்ளது.
- 2030 வரை உலகிலேயே அதிக இளைய மக்கள்தொகை கொண்ட நாடுகளில் ஒன்று.
- இந்தியாவின் கருவுறுதல் விகிதம் – 2.02%

**மக்கள்தொகை பெருக்க சாபம்**

**அதிக மக்கள்தொகை வளர்ச்சி பல சவால்களை எதிர்கொள்ளும்.**

1. **பசி மற்றும் வறுமை**

- வறுமையை ஒழிப்பது, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்து போராடுவது சவாலானது.
- சுகாதாரம் மற்றும் கல்வியை அதிகரிப்பது கடினம்.

2. **பொருளாதாரம் மற்றும் உற்பத்தித் திறன்**

- அறிவு பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குத் தேவையான திறன்களை இளைஞர்கள் பெற வேண்டும்.
- வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும்.
- ஆண் மற்றும் பெண் இருவரின் தொழிலாளர் பங்களிப்பு கவனிக்கப்பட வேண்டும்.

3. **பருவநிலை மாற்றம்**

- சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மீது அதிகரித்த அழுத்தம்
- மக்கள்தொகை பெருக்கம் மற்றும் சீரழிவு

4. முதியோர் மக்கள்தொகை

- முதியோருக்கான மருத்துவ செலவுகள், முதியோர் இல்லங்கள், கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் அதிகரிக்கும்.

5. மாநில வாரியாக கவனம்

- உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் போன்ற மாநிலங்களில் மொத்த கருவுறுதல் விகிதம் தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது.
- இது மக்கள்தொகையில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது

மக்கள்தொகை பெருக்கம் வரம் 6

1. அதிகரித்த மனித மூலதனம்

- தற்போது இந்தியா மக்கள்தொகை வளர்ப்பு சாளரத்தை அனுபவித்து வருகிறது. 2025 வரை இளைஞர்கள் பெருக்கம்
- கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் அதிகரித்த மனித மூலதனத்தைபயன்படுத்துகிறது.

2. மேம்பாடு

- புதுமை, கண்டுபிடிப்பு மற்றும் மேதைகளை உருவாக்குவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

3. பொருளாதாரங்களின் அளவு

- அதிகரித்த உற்பத்தி மற்றும் பங்களிப்பு
- அதிகரித்த பொருளாதார வளர்ச்சி

4. திறமையான மக்கள்தொகை

- தொழில்நுட்பங்கள் மற்றும் தேவை.
- உயர் சிறப்பு வாய்ந்த நபர்களுக்கு வழிவகுக்கிறது.

5. உழைக்கும் மக்கள் தொகை அதிகரிப்பு

- உழைக்கும் வயது மக்களின் அதிக பங்களிப்பு

முடிவுரை 1

- இந்தியா தற்போது எதிர்கொள்ளும் மக்கள்தொகை ஈவுத்தொகை ஒரு பேரழிவு அல்ல. ஈவுத்தொகையாக இருக்கும்.

**7) தேர்தல் ஆணையம் பற்றி விளக்கி, தேர்தல் ஆணையத்திற்கு தேர்வுக் குழுவின் அவசியத்தைக் கூறி, தாமதம் பற்றி விளக்கி, உச்சநீதிமன்றத்தின் பரிந்துரைகளை விளக்குக**

இந்திய தேர்தல் ஆணையம் : விதி 324 1

- ஒரு தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்.
- ஒன்றிய பிரதேசம் மற்றும் மாநிலங்களின் தேர்தல் நடவடிக்கைகளை நிர்வகிக்கும் அதிகாரம்
- தேர்தலை நிர்வகிக்கிறது.
- லோக்சபா, ராஜ்ய சபா
- குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர்
- பகுதி XV தேர்தல் பற்றியது.

அமைப்பு 2

- தொடக்கத்தில் 1 தேர்தல் ஆணையர்
- தேர்தல் ஆணையம் திருத்தச் சட்டம், 1989
- 1 தேர்தல் ஆணையர் (தலைமை ஆணையர்)
- 2 தேர்தல் ஆணையர்

நியமனம் 2

- குடியரசுத் தலைவர் தலைமைத் தேர்தல் ஆணையரையும் தேர்தல் ஆணையரையும் நியமிக்கிறார்.
- பதவிக்காலம் - 6 ஆண்டுகள் / 65 வயது வரை

தேர்வுக் குழுவின் அவசியம் 2

- 3 நபர் கொண்ட தேர்வு குழுவால் தேர்தல் ஆணையரை நியமிக்க கோரிய பொதுநல வழக்கை உச்சநீதிமன்றம் ஒப்புக்கொண்டது.
- தேர்வுக் குழு
- பிரதமர்
- லோக்சபாவின் எதிர்க்கட்சித் தலைவர்
- இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி
- தற்போது நடைமுறையில் வெளிப்படைத்தன்மை இல்லை
- பிரதமர் மற்றும் அமைச்சர்கள் குழுவின் பரிந்துரைப்படி நியமித்தார்.
- எந்த தகுதியும் குறிப்பிடப்படவில்லை
- சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு பொறுப்பு
- ஆளும் கட்சிக்கு வரம்பற்ற அதிகாரங்கள் (தேர்ந்தெடுப்பதில்) உள்ளன.

**தேர்வுக் குழுவின் கோரிக்கை** 2

- பரிந்துரைக்குழு

1. நீதிபதி தார்குண்டே பரிந்துரை (1975)
2. தினேஷ் கோஷ்வாமி குழு (1990)
3. சட்ட ஆணையம் (2015)

- இரண்டாவது சீர்திருத்த ஆணையம் சட்ட அமைச்சர் இராஜ்யசபாவின் துணைத் தலைவரும் இக்குழுவில் அடங்க வேண்டும் என பரிந்துரைத்தது.
- 70ஆவது அரசியலமைப்பு திருததச் சட்டம் மசோதா, 1990 தேர்வுக் குழு வேண்டும் என பரிந்துரைத்தது.
- இரு அவைகளின் தலைவர்
- லோக்சபாவின் எதிர்க்கட்சித் தலைவர்
- அரசியல் விருப்பமின்மையால் 1993 மசோதா கைவிடப்பட்டது.

**அரசியலமைப்பு நிலை** 4

- விதி 324 – இந்த நோக்கத்திற்காக பாராளுமன்றத்தால் சட்டம் இயற்றப்படாதவரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார்.
- அத்தகைய சட்டம் இல்லாத பட்சத்தில் நிறைவேற்று அதிகாரத்தில் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறது.

**உச்சநீதிமன்றத்தின் பரிந்துரை**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட தேர்தல் ஆணையர்கள் நியமனக் குழுவின் நடுநிலைத்தன்மையை உறுதிப்படுத்த நியமிக்க வேண்டும்.
- மத்திய அரசாங்கம் தேர்தல் ஆணையர்களை நியமிக்க சட்டம் இயற்ற வேண்டும்.
- தேர்தல் ஆணையர்களை தேர்ந்தெடுக்கும் முறை வெளிப்படைத்தன்மையாக இருக்க வேண்டும்.

**முடிவுரை** 2

- தற்போது நடைமுறையில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும்.
- நெறிமுறை மற்றும் திறமையான நபர்கள் சம்பந்தப்பட்ட பதவிக்கு தலைமை தாங்குவதை உறுதிப்படுத்த போதுமான பாதுகாப்புகள் இருக்க வேண்டும்.

---

**8) NIA நிறுவனம், அதிகாரம், செயல்பாடுகள் பற்றி கூறுக? சமீபத்திய திருத்தங்கள் பற்றி கூறி அவை இந்தியாவின் கூட்டாட்சிக்கு பாதிப்பு ஏற்படுத்துமா என்பதை விளக்குக.**

**தேசிய புலனாய்வு முகமை** 2

- இந்தியாவின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் நடைபெறும் தீவிரவாத தாக்குதல்களை எதிர்கொள்ளும் புலனாய்வு அமைப்பு.

**அதிகாரங்கள்** 2

- என்.ஐ.ஏ சட்டத்தின்படி சந்தேகம் ஏற்பட்டாலே கைது செய்து சிறையில் அடைக்கலாம்.
- நபர் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை முதல் அறிக்கையில் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.
- இந்தியாவிற்கு உள்விவகாரங்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இந்திய இறையாண்மை பாதிக்கும் வண்ணம் செய்யப்படுபவர்களையும் விசாரணை செய்யலாம்.
- நாட்டின் உயர்ந்த அமைப்பான சி.பி.ஐ விட உயர்ந்த அதிகாரம் கொண்டது.
- குற்றச் செயல்களில் ஈடுபடும் யார் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
- வெளிநாடு வாழ் இந்தியர்களின் பாதுகாப்பிலும் கவனம் செலுத்தியது.
- நாட்டின் 38 இடங்களில் என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றங்களை நிறுவி விசாரணை செய்கிறது.
- குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எந்த அறிவிப்பும் வழங்காமல் கைது செய்யலாம்.
- தொடர்புடைய மாநிலத்தையோ அல்லது உயர்நீதிமன்ற அனுமதி தேவையில்லை.

**செயல்பாடுகள்** 4

- புதிய அறிவியல் & தொழில்நுட்பங்களைக் கொண்டு புலனாய்வு மேற்கொள்ளுதல்
- விரைவான விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- தகவல்களின் அடிப்படையில் மூலாதாரம் காரணம் வரை கண்டறிந்து தீர்வு காணுதல்

- பயங்கரவாதம் தொடர்புடைய தரவு தளத்தை உருவாக்குதல்
- சிறுபுள்ளி முதல் வட்டம் வரை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- வெளிநாட்டு பயங்கரவாத சட்டங்களுடன் ஒப்பீடு செய்து இந்திய சட்டங்களை மாறுதல் ஏற்படுத்துதல்
- புது டெல்லியை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது.
- 14 இடங்களில் கிளை அலுவலகங்களைக் கொண்டது.

**2019ஆம் ஆண்டு நிறுத்தம்** 2

**முதலாவது அம்சம்**

- வெளிநாடு வாழ் இந்தியர்களில் பாதுகாப்பு உள்ளடக்கம்

**இரண்டாவது அம்சம்** 4


- சிறப்பு நீதிமன்றத்தை கட்டமைக்க உதவும்.-ஆ வ த ா ல் மத்திய அரசின் அனுமதி மட்டும் பெற்று செசன்ஸ் நீதிமன்றத்தை அணுகலாம்.

**மூன்றாவது அம்சம்**

- ஆள்கடத்தல், கள்ள நோட்டு விவகாரங்களையும் விசாரணை செய்ய கூடுதல் அதிகாரம்.
- தகவல் தொழில்நுட்ப சட்டம் (2000) பிரிவு 66F

**கூட்டாட்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் (காரணங்கள்)** 1

- பிரிவு 6இன் கீழ் வரையறுக்கப்பட்ட குற்றங்களை மாநில அரசின் அனுமதியின்றி விசாரணை செய்கிறது
- அரசியலமைப்பு அட்டவணை VII சட்டம் ஒழுங்கினை மாநில அரசிற்கு வழங்கியுள்ளது.
- ஆனால் சட்டத்திருத்தம் மாநில அரசின் ஆலோசனையை கூட ஏற்க அவசியமில்லை.
- பிரிவின் திருத்தத்தில் இந்திய இறையாண்மையை பாதிக்கும் எந்த நபர் / கூட்டத்தையே காரணமின்றி கைது செய்ய விதிப்பதால் மத்திய அரசை விமர்சனம் செய்யும் மாநிலங்கள் தேசதுரோக வழக்கில் சிக்க வாய்ப்புள்ளதால் இது கூட்டுறவு கூட்டாட்சிக்கு எதிராக மாறுகிறது.




வெற்றியின் முகவரி
SINCE 2006
SURESH' IAS ACADEMY
BANK | TNPSC | SSC | RAILWAY | POLICE | TET

| தூத்துக்குடி | திருநெல்வேலி | இராமநாதபுரம் | மதுரை | சென்னை |
|---|---|---|---|---|
| 162-A, எட்டையபுரம் ரோடு | 8A/1, இலந்தகுளம் ரோடு, பாளையங்கோட்டை | 82, புளிகாரத் தெரு, கண்ணன் கோவில் அருகில் | மாஸ்டர் மஹால் பின்புறம், முடக்குச்சாலை, காளவாசல் | 4, அண்ணா ஆர்ச் எதிர்புறம், அருகம்பாக்கம், சென்னை அஞ்சல் |
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 |
| 99941 70110 | 99948 14400 | 75503 52917 | 98431 15233 | 97555 52009 |